# <u>செய்தி வெளியீடு</u>

## <u>மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் “கொடி நாள் செய்தி”</u>

முப்படை வீரர்களான இராணுவம், கப்பல் மற்றும் விமானப்படை ஆகியவற்றில் வலிமையுடன் பணியாற்றி வருபவர்களின் பெருமையை நினைவு கூறும் வகையில் ஆண்டுதோறும் டிசம்பர் 7ம் நாள் நாடெங்கிலும் கொடிநாளாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

நமது நாட்டின் எல்லைப் பகுதிகளை எதிரிகளிடமிருந்தும். எல்லைக்குள் ஊடுருகின்றவர்களிடமிருந்தும் காத்திடும் வகையில் திறமையுடன் செயல்பட்டு வரும் முப்படை வீரர்களின் தன்னலமற்ற சேவைகளை நாம் அனைவரும் நினைவு கூறக்கூடிய அருமையான தருணமாகும்.

மிகப்பெரிய நமது தேசத்தின் வரலாற்றினை இன்றைய இளைய தலைமுறையினருக்கு விளக்கச் செய்வதன் மூலம் தேசபக்தியை அவர்கள் உள்ளத்தில் வளர்ந்தோங்கச் செய்யவும், முப்படைகளில் சேர்ந்து பணியாற்றிட ஊக்குவித்திடவும் நல்வாய்ப்பாக அமைகின்றது.

தமிழ்நாடானது வீரம் செறிந்த படைவீரர்களை உருவாக்குவது மட்டும்மல்லாது நாட்டிற்காக பணியாற்றிடும் இப்படை வீரர்கள் பணி ஓய்வுபெற்றோர், அவர்களின் வயதானோர் இயலாதோர் ஆகியோர் பயனடையும் வகையில் சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, சமூகப்பாதுகாப்பு போன்ற புதுமையான திட்டங்களை அறிமுகப்படுத்தி, சிறப்பாக செயல்படுத்தி வருகின்றது. முப்படை வீரர்களுக்கு மட்டுமல்லாது, இத்திட்டங்கள்யாவும் அவர்களின் முழுக்குடும்பங்களும் பயனடையும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

சிறந்த இத்திட்டங்களை செயல்படுத்துவதற்கான முக்கியமாக நிதி ஆதாரங்களே, முப்படை கொடிநாள் நிதிக்கு ஆர்வமுடன் பொதுமக்களால் கொடுக்கப்படும் நிதி உதவியே ஆகும்.

இத்தகைய கொடிநாள் நிதிக்கு தாராளமாக வழங்குவதில் தனிநபர் பங்களிப்பில் தமிழ்நாடானது எப்பொழுதும் முதன்மையான மாநிலமாகத் திகழ்கின்றது என்பதை எண்ணி பெருமிதம் அடைகின்றேன்.

சிறந்த நோக்கத்துடன் நாம் அளிக்கும் கொடிநாள் நிதியுதவி மூலம், நமது நாட்டிலுள்ள எல்லைகளை துணிச்சலுடன் பாதுகாத்து வரும் படை வீரர்களுக்கு நமது ஒற்றுமையை வெளிப்படுத்தி வருகிறோம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

எனவே, இந்த நல்ல தருணத்தில் நாட்டின் நலனுக்காக வீரத்தீரத்துடனும் நாட்டுப்பற்றுடனும் பணியாற்றி வரும் நமது படை வீரர்களின் சேவையைப் போற்றிடும் வகையில் கொடிநாள் நிதிக்கு தாராளமாக நிதியுதவி அளிக்குமாறு உங்களனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

**பன்வாரிலால் புரோகித்**

**தமிழ்நாடு ஆளுநர்**

---

ராஜ்பவன், சென்னை -22 ஒம்/-

நாள் : 06.12.2018 இணை இயக்குநர் (ம.தொ)

## Armed Forces Flag Day Message by Hon'ble Governor of Tamil Nadu

**Press Release**

**Date: 06.12.2018**

07th December is observed as Flag Day for remembering our valiant soldiers in Army, Navy and Air Force with pride. This is an occasion to remind ourselves of the selfless services of our Armed Forces Personnel in protecting our country's territory from the enemies and intruders. It is an opportunity to take the history of our great Nation to the younger generation in order to nurture patriotism and inspire them to join the Armed Forces.

Tamil Nadu has produced brave soldiers and has always been in the forefront to attend to the welfare of the serving and the retired soldiers with many innovative and improvised schemes aiming at health, education, employment and social security schemes for the old and infirm. The schemes cover not only the armed forces personnel who are serving and retired but their entire family.

The major source of funding for these initiatives has been public contribution to the Armed Forces Flag Day Fund. Tamil Nadu has always been a topper in per capita contribution to the Flag Day Fund. By this noble gesture of contribution to the Flag Day Fund we express our solidarity with the soldiers who are gallantly guarding our frontiers. So I appeal to the people of Tamil Nadu to donate liberally to the cause in appreciation of the bravery and patriotic fervor shown by our Armed Forces.

BANWARILAL PUROHIT

GOVERNOR OF TAMIL NADU

---

Raj Bhavan, Chennai Sd/-

Date : 06.12.2018 Joint Director (PR)